மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.

அ.வ.எண்.88/2019

வாக்குமூலம்: வா.சா.1 முகமது யூசுப்

<u>07.06.2023:</u> சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமானத்தின்பேரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

<u>குறுக்கு விசாரணை:–</u> 1) நான் தற்பொழுது எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விலாசத்தில் சுமார் 40 வருட காலமாக வசித்து வருகிறேன். என் வீட்டின் வாசல் தெற்கு பக்கமும், கிழக்கு பக்கமும் உள்ளது. எனது சொத்து எனது அப்பா கிரையம் பெற்ற சொத்தாகும். எனது வீட்டிற்கு தெற்குப்புறம் கோவில் உள்ளது தெரியுமா என்றால், கோவில் இல்லை. கோவில் வீடுதான் உள்ளது. 150 ஆண்டு காலமாக எனது வீட்டிற்கு தெற்குப்புறம் கோவில் உள்ளது என்றால் சரியலல.

2) அந்த கோவில் வீடு 2016ம் ஆண்டு பாகப்பிரிவினைக்குப்பிறகு எனக்கு பாத்தியப்பட்டது. 2016ம் ஆண்டுக்கு முன்பு பிரச்சனை ஏதும் இல்லை. 2016ம் ஆண்டுக்கு பின்னிட்டுதான் சொத்து எனக்கு வந்த பின்புதான் தாவா பரிகாரம் கோரியுள்ளேன். 3 முதல் 5 பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு ஏதேனும் தாவாவிற்கு முன்பு கொடுக்கப்பட்டதா என்றால் எனக்கு ஞாபகமில்லை. செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அதனை நான் வருவாய்த்துறையில்தான் முறையிட்டு பரிகாரம் தேடிக்கொள்ளவேண்டும் என்றால் அது எனக்கு தெரியாது.

3) 1ம் பிரதிவாதி புல எண்.829/10 ஆனது நத்தம் தெருவாகும். அதிலிருந்து ஒரு பகுதிக்கு புல எண்.829/59 என உட்பிரிவு செய்து பட்டா கொடுக்கப்பட்டுள்ளது. அதில் 1ம் பிரதிவாதி வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி புல எண்.829/11ல் வீடு கட்டியுள்ளார். அதற்கு அவர் பட்டா பெற்றுள்ளார்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேண்டுகோளின்பேரில் ஒத்திவைக்கப்படுகிறது)

N GNANASAMBANDAM

Digitally signed by N GNANASAMBANDAM
Date: 2023.06.07 18:03:32 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.